செய்தி வெளியீடு எண் : 1312 நாள் : 05.07.2023

## 5.7.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் உணவு அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் ஆற்றிய உரை

வணக்கம்!

மாண்புமிகு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஒன்றிய இணை அமைச்சர்கள் மற்றும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அமைச்சர் பெருமக்களுக்கும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் அலுவலர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2022–23 ஆம் ஆண்டு காரிஃப் பருவத்தில் 1.9.2022 முதல் தமிழ்நாட்டில் நெல் கொள்முதலைத் தொடங்குவதற்கு அனுமதி அளித்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் மாண்புமிகு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று வருகின்ற 2023–24 காரிஃப் பருவத்தின் கொள்முதலை 1.9.2023 முதல் தொடங்குவதற்கும் அனுமதி அளித்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கு கண்டுமுதல் அரிசிக்கான மானியத் தொகையைக் காலாண்டுதோறும் வழங்கிக் கொண்டிருப்பதற்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று கடந்த ஆண்டுகளுக்கு

நிலுவையுள்ள மானியத் தொகைகளையும் விரைந்து வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் நடைபெறும் பரிவர்த்தனைகளில் 98.15% கைவிரல் ரேகை பதிவு மூலம் நடைபெறுகிறது. இதனால் உரிய குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வருமானம் மற்றும் சமூகப் பாகுபாடின்றி உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திட கடந்த 40 ஆண்டுகளாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமல்படுத்தப்பட்டு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் என்ற நிலையினைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறது.

தமிழ்நாட்டில் மாறிவிட்ட உணவுப் பழக்கத்தின் காரணமாக கோதுமை நுகர்வு அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் கோதுமை உற்பத்தி இல்லாததால் கோதுமையின் தேவைக்காக பிற மாநிலங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மே 2022 வரை ஒன்றிய அரசிடமிருந்து மாதமொன்றிற்கு 30,648 மெட்ரிக் டன் கோதுமையை ஒதுக்கீடாகப் பெற்று வந்தோம். ஆனால் தற்போது ஜீன் 2022 முதல் மாதம் ஒன்றிற்கு 8,532 மெட்ரிக் டன் கோதுமை மட்டுமே தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்தோடு கூடுதலாக மாதமொன்றிற்கு 15,000 மெட்ரிக் டன் கோதுமையை அரிசிக்குப் பதிலாக எங்களுக்கு ஒதுக்கீடு செய்திடவோ அப்படி இல்லையெனில் திறந்தவெளிச் சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் வழங்கிடவோ கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் இரண்டு கிலோ ராகி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நாங்களும் சிறு தானியங்களின் விளைச்சலை அதிகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டிற்கு போதுமான அளவு ராகி மற்றும் சிறு தானியங்கள் வழங்கினால் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற அரிசியைக் காட்டிலும் 60,000 மெட்ரிக் டன் அரிசி தமிழ்நாட்டிற்கு தேவைப்படுகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமுல்படுத்துவதற்கு முன்பே செயல்படுத்தி வரும் அனைவருக்குமான பொது விநியோகத்

திட்டத்திற்காகவும் மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்திற்காகவும் இந்த அரிசி தேவைப்படுகிறது. ஆதலால் திறந்தவெளிச் சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் எங்களுக்கு 60,000 மெட்ரிக் டன் அரிசி வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வழங்குவதால் வெளிச் சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தவும் இயலும்.

தொலைநோக்குப் பார்வையுடன் எங்களது பேரன்பிற்குரிய தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் ஒன்றிய அரசுடனும், இதர மாநில அரசுகளுடனும் ஒன்றிணைந்து நம் நாட்டில் அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்திட உறுதுணை புரிவோம்!

**நன்றி!!**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in